அனுப்புநர்

இயக்குநர்,
நிலஅளவை மற்றும்நிலவரித்திட்டம்,
சர்வே ஹவுஸ்,
சேப்பாக்கம்,
சென்னை – 05.

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.
2. அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள்
3. இணை இயக்குநர், மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை
4. அனைத்து மாவட்ட உதவி இயக்குநர்கள், மாவட்ட நில அளவை அலுவலகம்.
5. உதவி ஆணையர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம், எழும்பூர், சென்னை – 08.

ந.க.ண1/ 11886 /2023 (நி.அ) நாள். 23 .07.2023

அய்யா,

| | |
|---|---|
| பொருள்: | நில அளவை (ம) நிலவரித்திட்ட ஆவணங்கள் எந்தெந்த அலுவலகங்களில் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்குவது – குறித்து. |
| பார்வை: | 1)இவ்வலுவலக கடித எண் நகண3/40472/2015, நாள்:23.12.2015<br>2)தமிழ்நாடு ஆவணகாப்பகம் கடிதம் எண் N.1842/S9/2023, நாள்:02.05.2023 |

***************

நில அளவை (ம) நில வரித்திட்ட ஆவணங்கள் எந்தெந்த அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும், அந்த அலுவலகங்களின் பொது தகவல் அலுவலர்/ மேல் முறையீட்டு அலுவலர்கள் பற்றிய விபரங்கள் ஏற்கனவே பார்வை 1–ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி அனைத்து மாவட்ட மற்றும் வட்ட அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பபட்டது.

இந்நேர்வில் பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு ஆவணகாப்பக கடிதத்தில் வரிசை எண் 7 மற்றும் 12 சில மாறுதல் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து கீழ்கண்டவாறு மாற்றியமைத்து பட்டிலிடப்பட்டுள்ளது :–

வடு

| வ.எண் | ஆவணத்தின் பெயர் | பாதுகாக்கப்படும் அலுவலகம் | பொது தகவல் அலுவலர் | மேல்முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | நில உடைமை மேம்பாட்டுத் திட்டப்பணிக்கு முன்புள்ள பழைய நில அளவை புலப்படச்சுவடிகள். | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 2. | பழைய செட்டில்மெண்ட் பதிவேடு (Old Settlement Register ––– O.S.R) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 3. | அச்சிடப்பட்டமறு நிலவரித்திட்ட செட்டில்மெண்ட் 'அ' ( R.S.R) பதிவேடுகள் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 4. | நிலவரித்திட்ட அலுவலார் அலுவலக வழக்கு கோப்புகள் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 5. | நிலவரித்திட்ட அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட நிலப்பதிவேடு நகல் (S.L.R. Copies) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| 6. | நகர நில அளவை மூல ஆவணங்கள் | மத்திய நில அளவை அலுவலகம், சென்னை | உதவி இயக்குநர் (வரைவு), மத்திய நில அளவை அலுவலகம், சென்னை | இணை இயக்குநர், மத்திய நில அளவை அலுவலகம், சென்னை |
| 7. | நில உடைமை மேம்பாட்டுத்திட்ட புலப்படம் | தமிழ்நாடு ஆவண காப்பகம், எழும்பூர் | ஆராய்சி அலுவலர் | உதவி ஆணையர் |
| 8. | நில உடைமை மேம்பாட்டுதிட்ட அ பதிவேடு மற்றும் நத்தம் அடங்கல் | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 9. | நில உடைமை மேம்பாட்டுதிட்ட சிட்டா (ம) பட்டா | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | நில உடமைப்பதிவு மேம்பாட்டு திட்ட கிராமப்படங்கள் | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 11. | நிலஉடமைப்பதிவு மேம்பாட்டு திட்ட புலப்படச்சுவடி (ம) நத்தம் புலப்படச்சுவடி | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 12. | நத்தம் புலப்படம் | தமிழ்நாடு ஆவண காப்பகம், எழும்பூர் | ஆராய்சி அலுவலர் | உதவி ஆணையர் |
| 13. | நகரஅளவை பிளாக் வரைபடங்கள்(ம) நிலப்பதிவேடு | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 14. | பைமாஷ் ஆவணங்கள், நத்தம் நில வரித்திட்ட ஆவணங்கள், இனாம் பதிவேடுகள், கிராம பழைய 'அ' பதிவேடுகள் (ம) இனாம் ஒழிப்பு சட்ட ஆவணங்கள் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர் |
| . | கிராம வரைபடங்கள் | உதவி இயக்குநர் சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | தொழில் நுட்ப மேலாளார். சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம)உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை. | உதவி இயக்குநர். மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) இணை இயக்குநர் மத்தியநில அளவை அலுவலகம், சென்னை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | வட்ட வரைபடங்கள் | உதவி இயக்குநர் சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | தொழில் நுட்ப மேலாளார். சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம)உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை. | உதவி இயக்குநர். மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) இணை இயக்குநர் மத்தியநில அளவை அலுவலகம், சென்னை. |
| 17. | மாவட்ட வரைபடங்கள் | உதவி இயக்குநர் சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | தொழில் நுட்ப மேலாளார். சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம)உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை. | உதவி இயக்குநர். மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) இணை இயக்குநர் மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை. |

மேலும், பட்டியலில் குறிப்பிட்டுள்ள மேற்படி ஆவணங்களின் நகல்கள் கோரி மனுக்கள் பெறப்பட்டால் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து மனுதாரர்கள் கோரும் ஆவணங்களின் நகல்கள் வழங்கும்படி சம்மந்தப்பட்ட பொது தகவல் அலுவலர்கள்/ மேல் முறையீட்டு அலுவலர்கள் ஆகியோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இனி வருங்காலங்களில் தகவல் பெறும் உரிமைச்சட்டப் பிரிவுகளில் பெறப்படும் மனுக்களின் மீது நடவடிக்கை எடுப்பதில், மிகுந்த கவனத்துடன்செயல்பட வேண்டும் எனவும், நில உரிமை ஆவணங்களின் விபரம் கோரும் மனுதாரர்களின் மனுக்கள் சரிவர பரிசீலிக்காமல், அவர்களை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மாநில ஆவண காப்பகத்திற்கும், மத்திய நில அளவை அலுவலகத்திற்கும் அலையவிடக்கூடாது எனவும், மனுதாரர்களுக்கு

உரிய விபரங்களை சரியான அலுவலகம் மூலம் பெற்றுக் கொள்ளும் வகையில் இப்பட்டியலில் கண்டுள்ள விபரங்களின்படி அறிவிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்).ப.மதுசூதன்ரெட்டி
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட
இயக்குநர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/7/23
நிருவாக அலுவலர்

24.07.2023